நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 (CCIW), மதுரை.
முன்னிலை: திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்எல்பி.,
நீதித்துறை நடுவர் எண்.3,(CCIW), மதுரை.
2020ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை
சி.ஆர்.எம்.பி. எண்.1987/2020

. . . . .

1. ரவிச்சந்திரன்(எ)பொன்னுச்சாமி
   த.பெ. முருகவேல்
2. முனியசாமி(எ)முனீஸ்வரன்
   த.பெ.முத்துராமலிங்கம்
3. பாண்டியராஜா
   த.பெ.முத்தையா . . . மனுதாரர்கள்/ 1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள்

// எதிரிடை //

அரசுக்காக: காவல் ஆய்வாளர்
மதுரை குடிமைப்பொருள் வழங்கல் குற்ற
புலனாய்வு பிரிவு காவல் நிலையம்
குற்ற எண்.139/2020
பிரிவு 6(2)(3)(4)of TNSC(RDCS)order 1982 r/w
7(1)(a)(ii)of EC Act 1955 . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்கள்/ 1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் குவிமுச பிரிவு 437-ன்கீழ் பிணை கோரி மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.ராஜகோபால் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும் இந்நீதிமன்றம் வழங்கிடும்

## உத்தரவு

1. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/ 1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் கடந்த 30.10.2020 முதல் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறைச்சாலையில் இருந்து வருகிறார்கள் என்றும் எதிரிகளை பிணையில் விட வேண்டும் என்றும், இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக இம்மனு விசாரணைக்கு வந்தபோது எதிரிகளை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் வாதிடப்பட்டது.

2. அரசு தரப்பில் 1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் அரசு

பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் புழுங்கல் அரிசியை TN-59-BL-7107 என்ற பதிவு எண் கொண்ட டாடா 207 என்ற என்ற நான்கு சக்கர வாகனத்தில் தலா சுமார் 50 கிலோ எடை கொண்ட 77 ரேசன் சணல் சாக்குகளில் சுமார் 3850 கிலோ ரேசன் புழுங்கல் அரிசியை 5வது எதிரி மூலம் 4வது எதிரி ரேசன் கடை விற்பனையாளரிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமாக கடத்தி வந்து குற்றம் புரிந்துள்ளதாகவும் மேலும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும் மனுதாரர்கள்/1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் ஜாமீனில் வெளியில் சென்றால் தொடர்ந்து இது போன்ற குற்ற செயலில் ஈடுபடுவார்கள் என்பதாலும், இதனால் அரசுக்கு அதிக இழப்பு ஏற்படும் என்பதாலும், மேலும் 2வது எதிரி மற்றும் 5வது எதிரி தலைமறைவாக இருப்பதாலும், மனுதாரர்கள்/1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகளை ஜாமீனில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

3. இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் அரசு தரப்பில் கூறப்பட்ட கூற்று ஆகியவற்றை கருத்தில் கொண்டும் 1வது எதிரி மற்றும் 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் அரசு பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் புழுங்கல் அரிசியை TN-59-BL-7107 என்ற பதிவு எண் கொண்ட டாடா 207 என்ற என்ற நான்கு சக்கர வாகனத்தில் தலா சுமார் 50 கிலோ எடை கொண்ட 77 ரேசன் சணல் சாக்குகளில் சுமார் 3850 கிலோ ரேசன் புழுங்கல் அரிசியை 5வது எதிரி மூலம் 4வது எதிரி ரேசன் கடை விற்பனையாளரிடமிருந்து குறைந்த விலைக்கு அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமாக கடத்தி விற்று அதிக லாபம் சம்பாதித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மனுதாரர்கள் /1வது எதிரி, 3வது எதிரி மற்றும் 4வது எதிரிகள் வெளியில் சென்றால் தொடர்ந்து இக்குற்றச்செயலில் ஈடுபடுவார்கள் என்பதாலும், இதனால் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், 2வது எதிரி மற்றும் 5வது எதிரி தலைமறைவாக இருப்பதை கருத்தில் கொண்டும், புலன் விசாரணை நிலுவையில் உள்ளதாலும் இவ்வழக்கின் இந்த பிணை மனுவை தள்ளுபடி செய்வதுதான் நீதியின் பால் உகந்தது என்று கருதி இந்த பிணை மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் 2020ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6ஆம் நாள் அவைறிய பகரப்பட்டது.

ஒம்/- எஸ். சந்திர சேகர்
நீதித்துறை நடுவர் எண்.3
(CCIW), மதுரை.

ஒம்/- எஸ். சந்திர சேகர்